www.tamilarangam.net

# விடியல்




தமிழ் ஈழ விடுதலை இயக்கம் - மகளிர் ஏடு Oct 1984

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசலினுள் நுழைந்த வன்முறையால்
செத்த மரமானது தேசம் !
நித்தம் அழுததால் கவலைகளே மிச்சம் !
பறக்கவிட்ட வெண்புரு,
ஆயுதவலைக்குள் அகப்பட்டுக் கொண்டதால்
தமிழீழத்தரை புலர,
தாங்கினுள் தானியங்கித் துப்பாக்கி !

(முன்பக்க கவிதை)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**தமிழீழ விடுதலை இயக்கத்தின் மகளிர் பிரச்சாரப் பிரிவின் வெளியீடு.**

★

**விடியல் 1**

**கதிர் 1**

★

**அக்டோபர் 1984**

★

**அன்பளிப்பு 2 ரூபாய்.**

★



**தொடர்பு**

**ஆசிரியர்**

**1311, 13வது பிரதான வீதி**

**மேற்கு அண்ணா நகர்**

**சென்னை 600 040**


# விடிவை நோக்கி...

விடுதலை வரலாறுகளில் பெண்களின் பங்களிப்பு என்பது, அப்படியொன்றும் வியப்புக்குரியதுமல்ல - வேடிக்கையானதுமல்ல. பாலஸ்தீன மண்ணை மீட்கப் புறப்பட்டாளே அரபுப் பெண். அவளும் பெண்தான்! வியட்நாமில் இருந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்கவெனப் போர்க்கொடி ஏந்தினாளே, அவளும் பெண்தான்! மற்றும், இன்னோரன்ன உலக விடுதலை இயக்கங்களில், தம்மினத்துக்காக, தன்மானத்துடன் துணிந்து போரிடவென்று புறப்பட்ட புரட்சிப் பெண்களும் தான் அங்சம் வகிக்கின்றனரே, அவர்களும் பெண்கள் தான்! இதில் சந்தேகமேயில்லை! புரட்சி வரலாறுகள் அப்படியிருக்க, நமது தமிழீழ விடுதலையில் பெண்களின் பங்கு. ஏன் இவ்வாறு சில்லறையாக-அங்கொன்று இங்கொன்றாக இருக்கிறது? இந்தப் புரட்சி ஏடுகள்' நமது நாட்டுப் பெண்களின் காதில் இன்னும் எட்டவில்லையோ? அல்லது எட்டியும் இவை செவிடன் காதில் ஊதிய சங்கு நாதங்களாயிற்றோ?

தமிழ் ஈழத்துப் பெண்களே, தமிழீழவிடுதலையில், தாங்கள் இதுவரை ஆற்றி வந்த பங்களிப்பைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். அவை, உலக விடுதலை வரலாறுகளில் செம்புள்ளி பதித்த, புரட்சிப் பெண்களின் பங்களிப்புடன் ஒப்பிடுகையில் தூசிதான்! இதுகாலவரை நமது நாட்டுப் பெண்கள் என்ன தான் பெரிதாகச் செய்து விட்டார்கள்? மலையகத்தில் வாழும் பெண்கள், நாளாதம் தேயிலைச் செடிகளுடனேயே ஜீவிதம் நடத்தி, கண்ணீரும் கம்பலையுமாக துன்பக் கடலிலே மிதந்து கொண்டிருக்க, இவர்கள் என்ன செய்கிறார்கள். வேளைக்கு வேளை விதம் விதமான சாப்பாடு. வீட்டிலே 'வீடியோ' பின்னேரம் ஒரு 'வாக்கிங்' மாலையிலே 'சினிமா' இவர்களுக்கு என்ன கஷ்டம் தான் தெரியும்? உல்லாசமாகக் கூடி, அரட்டை அடிப்பார்கள்-ஊர்வம் பளப்பார்கள்.

இன்றைக்குக் கால் நூற்றாண்டு காலமாக, இலங்கையிலே தமிழினத்துக்கு எதிரான வன்முறைகள்! இனக்கலவரங்கள் வெடிக்கின்றன. சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன. பெண்கள் கதறக் கதறக் கற்பழிக்கப்படுகின்றார்கள், துடிதுடிக்க இறக்கின்றார்கள். தமிழினம் அழித்தொழிக்கப்படுகின்றது. இந்நிலையில், தமிழ்ப் பெண்களிடத்தில் ஒன்றுமட்டும் ஒலிக்கும். "ஐயோ பாவம்?"—இந்த அனுதாபம் மட்டும்தான். பின்பு பழைய பல்லவிகள் தொடரும்.

இவைதான், பழமையாக நடந்து வந்தாலும்கூட, தமிழீழ விடுதலையில் பெண்களின் பங்கு இல்லை என்று சொல்வதற்கில்லை. இந்தக் கொடூரங்களைக் காணச் சகி

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாது-இந்த ஒடுக்கு முறைக்கு எதிராகப் போர் தொடுக்க-தமிழினத்தின் விடிவை நோக்கி, ஒரு பெண் நமது சமூகத்திலிருந்து, விடுதலைக்கென்று வெளிக்கிட்டாலும் சமுதாயம் அவளை சும்மாவா விட்டு வைக்கின்றது? சந்தியிலே கூடும் சிறுசுகளுக்கு, இது தான் அன்றைய 'கிளைமார்க்ஸ் நியூஸாக இருக்கும். இந்தச் செய்தி அங்கு சலலடையாகிப் போகும், பின்னேரத்தில் கூடும் பெண்கள் வட்டத்தில், இந்தச் செய்திதான், வாயில் வெற்றிலையுடன் குதம்பும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் இதனைப்பற்றி வாய்க்கு வந்தபடி பேசி, அவளை நார் நாராகக் கிழிப்பர். இறுதியில் ஓடிப் போனவள் என்று முத்திரை குத்தும் இச் சமுதாயம்.

இத்தனைக்கும் மத்தியில் தான் இன்று எத்தனையோ இளம் பெண்கள், தமிழீழ விடுதலையிற் பங்கெடுக்கவெனக் களத்தில் குதித்துவிட்டனர். விடுதலைப் பாதையில் பார்வையாளர் அந்தஸ்தில் எவரும் இருக்க முடியாது. எவரும் தன்னாலியன்றவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காற்றித்தான் ஆகவேண்டும். ஏனெனில், தமிழீழ விடுதலை என்பது ஒன்றிரண்டு தனிநபர் குழுக்கள் சேர்ந்து, போராடிப் பெறப்படப்போவதல்ல. மாறாக, விடுதலைப் போராட்டத்தை, மக்கள் போராட்டமாக முன்னெடுப்பதில் தான் நமது விடுதலையின் நிதர்சனமே தொனிக்கின்றது. எனவே, எமது விடுதலைப் பாதையில் பெண்களின் பங்கும் இன்றியமையாததாயிற்று! இந்த பெண்கள், கடந்தகால விடுதலை வரலாற்று நிகழ்வுகளை ஊன்றிப் படிக்க வேண்டும். களமாட விரைய வேண்டும்.

இதனை மையமாகக் கொண்டே தமிழீழ விடுதலை இயக்க மகளிர் அணி இவ்விதழை வெளியிடுகின்றோம். எங்களது விடுதலைக்கான தேவைப்பாடுகள், விடுதலை வரலாறுகளில் மகளிர் ஆற்றிய பணிகள் போன்ற வற்றை அடக்கியதாக இவ்விதழ் உங்கள் முன் தவழ்கின்றது. இவ்விதழ் மூலம், தமிழின விடுதலையில் பெண்களின் பங்கு மென்மேலும் அதிகரிக்குமென்ற ஆவலில், விடியலின் சேதியை முடிககின்றோம்.

தமிழ்பேசும் மக்களின் விடியல் தொடரும்.

---

## ஆடவர்க்கு சமனாக என்ன செய்ய வேண்டும்?



வீட்டில் செய்ய வேண்டிய வேலை காரணமாக பெண்கள் நிலை இன்னும் கடினமானதாகவே இருக்கின்றது பெண் முழு விடுதலை பெற்று ஆணுக்கு சமனாய் வர தேசப் பொருளாதாரம் சோசலிச மயமாக்கப்பட வேண்டும். ஆக்கவளமுள்ள பொது உழைப்பில் பெண்கள் பங்கு கொள்ள வேண்டும். அப்போதுதான் பெண்கள் ஆடவர்க்கு சமனாக நிலை பெறுவர்.

முதலாளித்தவ ஆட்சியில் அரசியலில் செயற்பட தனிவகைப் பயிற்சி தேவையாய் இருந்தது. எனவே தான் மிகவும் முன்னேறிய சுதந்திர முதலாளித்துவ நாடுகளிலும் கூட, அரசியலில் பெண்கள் மிகச் சொற்பளவே ஈடுபட முடிகிறது. உழைக்கும் ஒவ்வொரு பெண்ணும் அரசியலில் ஈடுபட முடியும்படி செய்வதே நம்முன் உள்ள பணியாகும்.

**மா மனிதர், தோழர் லெனின்**

---

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழிக்கு மடல்

## என் அன்புத் தோழிக்கு!

புரட்சிகர வணக்கங்கள் உரித்தாகுக! பாசம் நிறைந்த உள்ளத்துடனும், பயந்த சிந்தனையுடனும் சராசரி குடும்பப் பெண்ணாக உலவிக் கொண்டிருந்த நான் இன்று, தமிழீழ விடுதலையை நோக்கமாக கொண்டு வீட்டைத்துறந்து சென்றுவிட்டேன். என்று கேள்விப்பட்டதும் நீ ஆச்சரியப்பட்டிருப்பாய்! என் சிந்தனை தடம்மாறி விட்டதாக கூட சிந்தித்திருப்பாய்! இச்சிந்தனை உனக்கு மட்டுமல்ல என் குடும்பத்தில் கூட எழுந்திருக்கும். ஏன் நான் வாழ்ந்த சமுதாயத்திற்கு கூட தோன்றலாம். ஆனால் என் சிந்தனை தான் தடுமாறி விட்டதா? இல்லையே! இப்போதுதான் நான் சரியான பாதையை தேடிக் கொண்டதில் பெருமையடைகின்றேன்.

சாக்கடை சமுகத்தின் முள்வேலியை அறுத்தெறிந்து, விடுதலை பெற நிதர்சனமான பாதை தமிழ் ஈழமே என உணர்ந்து தமிழீழப் பாதையை செப்பனிட களம் நோக்கி விரைந்த எனது செயற்பாடுகள் தடம் மாறியவை என்றால், நிச்சயமாக, இத்தடம் மாறிய சிந்தனையே தமிழீழ மக்களுக்கு விடிவை தரும் என்பதில் நான் உறுதியாயுள்ளேன்.

தோழி சற்று சிந்தித்துப்பார்....! அன்று ஒரு மாணவி, அரசபடைகளினால் கடத்திச் செல்லப்பட்டு கற்பழிக்கப்பட்டது. இன்னும் எத்தனையோ, அநியாயங்கள், அக்கிரமங்கள், இவைகள் நமக்கு எட்டாமல் சென்றுவிட்டனவா? இல்லையே! இன்று அயல்வீடு, நாளை என் வீடு இதில் ஏதும் சந்தேகம் உண்டா? எம்மைக் கட்டிப்போடும் சம்பிரதாயம் பண்பாடு இவை எல்லாமே அரக்கர்கள் வரும் போது அவர்களின் காலடியில் நசுக்கப்படுகின்றனவே, இதனை எமது சமுதாயம் உணராதிருப்பது ஏனோ? கலாச்சாரம் பண்பாடு என்ற போர்வைகளால் அடக்கப்பட்டு வந்த பெண்கள் கூட இன்று அவைகளைத் தூக்கியெறிந்துவிட்டு தமது சொந்த மண்ணை மீட்டெடுப்பதற்காக ஆயுதம் ஏந்துமளவிற்கு துணிந்து விட்டார்கள். பாலஸ்தீன விடுதலை போராட்டத்தில் அரபுப் பெண்களின் துணிகர செயல்கள் பற்றி அறிந்திருப்பாய் என நினைக்கிறேன். எமது சமுதாயத்தில் சம்பிரதாயம் என்ற போர்வையில் அடக்கப்பட்டு, அடிமைப் படுத்தப்பட்டு வரும் பெண்களிற்கெல்லாம் இந்த அரபுப் பெண்கள் ஓர் வழிகாட்டி நட்சத்திரம்.

www.tamilarangam.net



பண்பாடு, கட்டுப்பாடு என்று சொல்லிச் சொல்லியே பெண்களை அடிமைகளாகவும், அடுப்படி இயந்திரங்களாகவும் ஆக்கி அவர்களின் அறிவு, சிந்தனை எல்லாமே முடக்கப்பட்டு வருகின்றது. இவைகளை மூடி மறைக்கும் திரைதான் சமூதாய சம்பிரதாயங்கள். இவர்கள் இன்னும் இதை அறியாதது பெண் இனத்திற்கு நேர்ந்த சாபக்கேடு.

தோழி! நீ கூட அறிந்திருப்பாய் தமது இனத்திற்கும் விடுதலை வேண்டும் என்ற எண்ணத்துடன் ஓர் தூய விடுதலைப் பாதையில் இலட்சியக் கனவுகளோடு புறப்பட்ட எம் சக தோழி ஒருவருடைய தகப்பனாருக்கு நேர்ந்தகதி. சமுதாயத்தின் சாட்டையடிகள் அவரைதற்கொலைசெய்யுமளவிற்கு கொண்டு சென்றுவிட்டது. இதிலிருந்து புரிகிறதா? நமது சமுதாயம் எவ்வளவு பிற்போக்குத்தனமான எண்ணங்களைக் கொண்டுள்ளது என்று அதற்காக கட்டுப்பாடுகள் வேண்டாம் என்று நான் கூற வரவில்லே. அதே கட்டுப்பாடுகள் அதிகமாகி பெண்கள் அடிமைகளாகும் நிலைக்கு இன்று தள்ளப் பட்டுள்ளார்கள். அதனால்தான்சொல்கிறேன்! ஒவ்வொருவற்றிற்கும் சுயமாக சிந்திக்கசுதந்திரம் இருக்கின்றது. இதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. இந்த சிந்தனை சுதந்திரத்தின் பிரதிபலிப்புத்தான் நான் விடுதலைப் பாதையை நோக்கி வந்ததற்கான காரணம் ஆகும். ராணுவ கெடுபிடிகளை எல்லாம் கண்ணாற்கண்டு நேரே அனுபவித்து நாடு காக்கப் புறப்பட்ட பல்லாயிரக் கணக்கான தோழர்களுள் நானும் ஒருத்தி.

விடுதலை என்பது கேட்டுப் பெறுவதல்ல ஒடுக்குவோர் எந்த வழிமுறையைக் கையாள்கிறார்களோ அதே வழிமுறைகளையே நாமும் கையாள வேண்டும். இதற்கு மக்கள் சக்திதான் முதலில் தேவை. ஒருமித்த மக்கள் போராட்டத்தினால்தான் ஏகாதிபத்திய வல்லரசுகளை எதிர்த்து சிறிய நாடுகள் கூட விடுதலையடைந்துள்ளன. இதே போல்தான் எமது போராட்டமும் மக்கள் போராட்டமாகும். இதற்குள் பெண்களாகிய நாம் எவ்வாறு அடங்காமல் போவோம். விடுதலைப் போராட்டங்களிலே பெண்களாற்றிய பங்கை நீ இன்னும் உணராவிட்டால் வரலாற்று ஏடுகளை சற்று புரட்டிப் பார். புரட்சிப் பாதையில் ஆயிரமாயிரமாக பெண்கள் அணி திரண்டிருப்பதைக் காண்பாய்! இதே போல.எமது விடுதலைப் போராட்டத்தில் உன் பங்கு என்ன?

மேலும் நாளை உன் சகோதரன் கைது செய்யப்படலாம். மறுநாள் சிலர் நடத்தும் விளையாட்டுத்தனமான தாக்குதல்களால் சிறைக்குள் வைத்து மூர்க்கத்தனமாக கொலை செய்யபபடலாம். அரச படைகளைப் பலப்படுத்துவதற்கு சிலர் நடத்தும் திட்டமிடப்படாத ஒத்திகை விளையாட்டுக்களால் எம் இனம் உயிர்களையும், உடமைகளையும் எவ்வாறு இழந்து வருகிறது என்பது நான் எழுதி உனக்கு தெரியவேண்டிய ஒன்றல்ல. இவ்வாறு ஒன்றிரண்டு அதிரடித் தாக்குதல்களால் வல்லரசுகளின் உதவியால் பலப்படுத்தப்பட்ட ஸ்ரீலங்கா அரச கூலிப்படை-களை விரட்டி விடலாம் என சில தனிநபர் குழு நினைப்பது எவ்வளவு மடமைத்தனமானது. மோட்டுத்தனமானது. தற்கால கட்டத்தில் இவ்வாறான அதிரடித் தாக்குதல்கள் ஏற்றதல்ல என்பதனை நீ நன்றாகவே அறிந்திருப்பாய்.

ஆகவேதான், நான் தலைவர் தங்கத்துரையின் கொள்கை வழியில் நடைபோடும் தமிழீழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து தமிழீழ மக்களின் விடுதலைக்காகப் போராட புறப்பட்டுவிட்டேன்.

நீயும், எமது இயக்கத்தின் புரட்சிகர தன்மையையும், புரட்சிகர போக்கையும் நன்றாகவே புரிந்திருப்பாய்! எவ்வளவு காலம்தான் உன் சிந்தனையை முடக்க முடியும். முடங்கி இருக்கவும் முடியும் மிகப்பெரிய வரலாற்றுக் கடமை நம்முன்னே இருக்கும் போது.

என் சிந்தனையைப் பற்றி நீ புரிந்திருப்பாய். எனது பாதை சரியானது எனவும் உணர்ந்திருப்பாய் இனியும் வீட்டில் முடங்கியிருக்கவும் விரும்ப மாட்டாய் என நான் உணர்கிறேன்.

"என்றும் எங்கள் தலைவன் தங்கத்துரை கொள்கைக் குன்றும் குட்டிமணி"

உன் அன்புத் தோழி

தமிழ்ச் செல்வி

www.tamilarangam.net



# தமிழீழத் தாய்மார்களின்எழுச்சி

ஆகஸ்ட் 24ந் திகதி வெள்ளிக்கிழமை. சுமார் 2,000 தாய்மார்கள் கலந்து கொண்ட எழுச்சிமிகு ஊர்வலம், புரட்சிக் கோஷங்களுடன், ஸ்ரீலங்கா ராணுவத்தின் வெறித்தனங்களுக்கு அச்சுறுத்தலாக வெடித்த ஆர்ப்பாட்ட ஊர்வலமாக, யாழ் நகர் கச்சேரி நோக்கி வீறுநடை போட்டது.

சுலோக அட்டைகள், நெஞ்சை உருக்கும் வாசகங்களைத் தாங்கிக் கொண்டிருந்தன.

"எமது பிள்ளைகளை விடுதலைசெய்"

"இன்று எமது பிள்ளைகள்! நாளை உங்கள் பிள்ளைகள்!!"

"வளரும் பயிரை முளையிலே கிள்ளாதே?".

போன்ற கோஷங்கள் உணர்ச்சியுடன் முழக்க மிடப்பட்டன. மாதர்களின் சக்தி மிக்க ஊர் வலம், கண்ணீரும் கம்பலையுமான முகபா வத்துடன் மடைதிரண்ட வெள்ளமாக அணி திரண்டு சென்று கொண்டிருந்தது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, கர வெட்டி, துன்னாலை, புலோலி, நெல்லியடி, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளிலிருந்து கலந்து கொண்ட தாய்மார்களுடன் தொடங் கிய ஊர்வலத்தில் அன்னையர்களின் அழு ஒலியிடையேயும் முழங்கிய தாய்க்குலத்தின் உணர்ச்சிக் கோஷத்துக்கு ஆதரவாக, பென் மேலும் ஆயிரக்கணக்கான இல்லத்தரசிகள் கலந்து கொண்டனர். பெண்குலத்தின் எழுச்சிப்புயல், யாழ் கச்சேரி நோக்கி மிகப் பலமாக - ஆவேசமாக வீசத் தொடங்கியது.

புயல் வீச்சு, புரட்சிக் கோஷ உறுமல் களுடன் யாழ் கச்சேரிக்குள் பிரவேசித்தது. அரசாங்க அதிபர் திரு. எம் - பஞ்சலிங்கம், புரட்சி ஊர்வலத்தை மேற்கொண்ட வீரத் தாய்க்குலத்தால் முற்றுகையிடப்பட்டார். இந்தச் சூறாவளியின் விடுதலைத் தீரத்திலி ருந்து அரசாங்க அதிபரால் விடுபட முடிய வில்லை.

இவ்வீரதிலகங்களின் போர் முரசுக்கு அவர் தலைசாய்க்க வேண்டியதாயிற்று. அரசாங்க அதிபரிடம் மனுவொன்று கைய ளிக்கப்பட்டது.

"கைது செய்யப்பட்டுள்ள 500க்கும் அதிகமான தமிழ் இளைஞர்களை உடனடி யாக விடுதலை செய்யுங்கள்"

"தமிழீழத்தில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா ராணுவத்தை வாபஸ்பெறுங்கள்."

என்று அந்த மனு, ஸ்ரீலங்கா அரசைக் கண்ணீர் உகுத்து மிகவும் உருக்கமான, தாய்ப்பாசத்துடன் ஒன்றிக் கலந்து, வீரா வேசத்துடன் பறைசாற்றியது.

தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் படலம், இன்று நேற்று ஆரம்பித்த தொன் றல்ல ஒடுக்கு முறைக்கு எதிராக, தமிழினம் எப்போது விழித்துக் கொண்டதோ, — எப் போது விடுதலை உணர்வை எட்டிக் கொண் டதோ அப்போதே இந்த விவகாரத்துக்குக் குத்துவிளக்கேற்றியது ஸ்ரீலங்கா இனவாத அரசு!

ஆரம்ப காலத்தில், இளைஞர்களைக் கைது செய்யும் வீதம் மிகக்குறைவுதான்! ஆனால், இப்போதோ, மணிக்கு ஆயிரக் கணக்கில் ராணுவவலையில் சிக்கும் இளை ஞர்களின் வீதம் அதிகரித்துள்ளது— முன்பு, பக்கத்து வீட்டு இளைஞர்களைக் கைது செய்யும் போது, வேலி அருகில் உரல் வைத்து ஏறி விடுப்புப்பார்த்து — அரட்டை அடிக்கும் வேளையில் ஹீரோ பாத்திரமேற் கும் செய்தியாக அதனை ஆக்கி அலட்டிக் கொண்டிருந்த தமிழ்ப்பெண் சமுதாயம் தனது வீட்டுத் தலையனும் அந்த வலையில் மாட்டிக் கொண்டபோது தட்டிக் கேட்கத் துணிந்திருக்கின்றது. அலையலை யாகத் திரண்டு, அடக்கு முறைக்கு நியாயம் கேட்க வெளிக்கிட்டுள்ளது. போர்ப்பாயிரம் பாடிக் கொண்டு, ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் கைதுகளையிட்டு ஆர்ப்பரிக் கின்றது. அடங்கா வேதனையால் கொந் தளிக்கின்றது.

பெண்ணினம் விடுதலையிற் குதித்து விட்டது!

தமிழீழ விடுதலையை பெண்ணினத்தின் மகத்தான சக்தி வென்றெடுக்கத் துணிந்து விட்டது!

தணிந்து போகாத இவ்வெழுச்சி தமிழீழ விடுதலையில் பெண்களின் பங்கைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டது. எமதினத் தின் விடுதலையின் நிதர்சனத்தை மாதர், சத்தி உத்தரவாதம் செய்து விட்டது!

இத்தகைய பேரெழுச்சியின் மூலம்' "தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு எழுச்சிமிகு மக்கள் போராட்டம்" என்ப தனை எட்டுத்திக்கும் முட்டும்வண்ணம் தட்டிக் கொடுத்தது தமிழ்ப்பெண் சமுதாயம்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உண்மையை உணருங்கள்

"நேற்று அரசியல் குற்றவாளிகள் சிலரை விசாரணை செய்தார்கள். அந்த குற்றவாளிகளில் என் மகனும் ஒருவன். அவன் பெயர் பாவல். அவன் அங்கு ஒரு பிரசங்கம் செய்தான். இது தான் அந்தப் பேச்சு. அதை நான் மக்களிடம் வழங்கப் போகிறேன். அவர்கள் இதைப் படிக்கட்டும் உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும்......

(தாய் நாவலிலிருந்து)

என்று உரத்த குரலில் சத்தமிட்டு தன்னை சுற்றி சூழ்ந்து கொண்ட சனத்திரளுக்கு தனது மகனின் பிரசங்க உரைப் பிரதிகளை மக்களிடையே வீசி எறிந்தாள் தாய்.

உளவாளியினால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்படும் நிலையில் இருந்த தாய் பயந்து நடுங்கினாளா, அல்லது தப்பிக்கத்தான் முனைந்தாளா?

தான் கொண்டு வந்த பிரசுரங்கள் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டால் மக்களுக்கு கிடைக்காமல் போய்விடும் மக்கள் உண்மை நிலையை உணர முடியாமல் போய்விடும் என்று தான் அவள் கலக்கம் கொண்டாள்.

அக்கலக்கத்தின் காரணமாகவே தன்னிடம் இருந்த பிரசுரங்களை அள்ளி மக்களிடையே இரைத்தாள். அவள் மேலும் பேசும் போது.

"என் மக்களையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஏன் விசாரணைக்குக் கொண்டு வந்தார்கள் தெரியுமா? நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஒரு தாயின் இதயத்தை, என் போன்ற ஒரு கிழவியின் பேச்சை நம்ப முடியும் அல்லவா? அவர்களை விசாரணைக்குக் கொண்டு வந்தது ஏன்? எல்லோருக்கும் அவர்கள் உண்மையை எடுத்துக் கூறியதற்காகத்தான்.

வறுமை, பசி, பிணி தங்களது உழைப்புக்குப் பிரதியாக மக்களிற்கு இவைதான் கிடைக்கின்றன. நமது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் நமது கடைசி மூச்சுவரை இறுதி பலத்தையும் நமது உழைப்புக்காக அர்ப்பணம் செய்வதால், எப்போதும் நாம் அவர்களால் ஏமாற்றப்படுகிறோம். நாம் பெற வேண்டிய இன்பத்தையும். நலன்களையும் மற்றவர்கள் அறுவடை செய்து அனுபவிக்கின்றார்கள். சங்கிலியால் கட்டிப்போடப்பட்ட நாய் மாதிரி நம்மை அவர்கள் அறியாமையில் ஆழ்த்தியுள்ளார்கள். நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்தப்படுகின்றோம்-நாம் எதையும் தெரிந்து கொள்ளவே அஞ்சுகின்றோம், நமது வாழ்க்கையே விடியாத இரவாகப் போய் விட்டது."

(தாய் நாவலிலிருந்து)

கல்வி அறிவற்ற நிலையில் இருந்தவள் சமுதாயச் சேற்றுக்குள் உழன்றவள், சிந்தனை ஒடுக்கு முறையால் முடமாக்கப்பட்டவள் இத்தாய். ஆனால் அவளின் உணர்வு பூர்வமான வாசகங்கள்.

மக்கள் சிந்திக்கவும், விழிப்படையவும் வைக்கும் இவ்வாசகங்கள் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருக்க வேண்டியவை.

ருஷ்ய அறிஞர் மாக்சிம் கோர்க்கியின் சிந்தனையில் இருந்து உருவெடுத்த இந்நாவலின் நாயகி, தாய் ஒரு கற்பனை வடிவமாக நாம் கொள்ள முடியாது.

இப்படியான தாய்மாரே போல்ஸிவிக் கட்சியின் உறுதிக்கும் ருஷ்ய விடுதலைக்கும் உரமிட்டவர்கள்.

ஆகவே, தமிழீழத் தாய்மாரே உங்கள் பிள்ளைகள் போரிட்டால் காணாது. உங்களின் உறுதியான சிந்தனையும் செய்கையுமே உங்கள் வீரப் பிள்ளைகளின் எண்ணக் கருத்துக்களுக்கு வடிவமைக்கக் கூடியவை, உரமிடக் கூடியவை.

ஆகவே தமிழீழ விடுதலையை நிதர்சனமாக்க உங்கள் பணியே மிகப் பெரியதாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சர்வதேசரீதியிலான பெண்களின் விடுதலைப் போராட்ட வரலாறு!

# பாலஸ்தீனப் போராட்டத்தில் பெண்கள்!

மனிதகுல வரலாற்றில், இற்றைக் காலம் வரையுள்ள சமூகத்தின் செயற்பாடுகள், பெண்களை அடிமை நிலைக்கே இட்டுச் சென்றிருக்கிறது. இச்சமூகத்தில் ஆண்களின் செயற்பாடுகளையும் கருத்துக்களையும் மட்டுமே குறிப்பிடப்படுகின்றனவே, ஒழிய பெண்களின் கருத்துக்களும் செயற்பாடுகளும் மூடி மறைக்கப்பட்டு வெளிப்படுத்தப் படாமலே இருந்து வருகிறது. இந்நிலைப் பாட்டினால், அனேகமாக உலக வரலாறுகளில் பெண்களின் பங்களிப்பே இல்லையோ! என ஐயப்பாட்டை தோற்றுவிக்கிறது. ஆனால், இந்நூற்றாண்டிலுள்ள விடுதலை இயக்கங்களில பெண்களின் பங்களிப்பானது, வரலாற்று நூல்களில் இதுவரை ஈடு செய்ய முடியாத அளவு மிகப் பெரியதாயிருக்கிறது.



Israeli police attacking a young Arab woman

இன்று, தமிழீழம் கேட்டு போராடி வரும் விடுதலை இயக்கங்களில், ஆண்களுடன் சரிசமமாக தோளோடு தோள் நின்று போர் புரியும் பெண்களைப்பற்றி குறிப்பிட வேண்டியது அவசியம். அதிலும் புரட்சியாளர்களுக்கே உந்து சக்தியாக விளங்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அதில், பெண்கள் வகிக்கும் முக்கிய பங்கும் குறிப்பிடப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ்சார் பாலஸ்தீனத்தை தங்கள் காலனியாதிக்கத்துள் உட்படுத்தியமையும், "பால் போர்" பிரகடனம் மூலம யூதநாட்டை உருவாக்க உறுதியளித்தமையும், இச்செயற்பாடுகளினால் பாலஸ்தீன மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளையும், சியோனிசவாதிகள் பாலஸ்தீன மக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடித்து நாட்டைவிட்டு அகற்றியதும் யாவரும் அறிந்ததே.

பாலஸ்தீன மக்களை கலைத்து முற்றாக அழிக்கும் நோக்குடன் சியோனிச நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே 1917-ம் ஆண்டுவரை தேச அளவிலான போராட்டங்கள் நடந்த, காலத்திலிருந்தே பெண்கள போராட்டங்களில பங்குபற்று வந்தனர்.

முதன் முதலில் 1920 ஆம் ஆண்டளவில் பாலஸ்தீனப் பெண்கள் தங்களது தேசவிடுதலைப் போராட்டத்தில் முற்று முழுதாக பங்குபற்ற ஆரம்பித்தனர். பிரிட்டிசாரின் காலனியாதிக்கத்தையும், யூதர்களின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சியோனிச நடவடிக்கையையும் எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் பிரச்சாரங்களிலும் ஆண்களோடு சரிசமமாக தமது பங்களிப்பை வழங்கி வந்தனர். ஆரம்பத்தில் இவர்களின் போராட்டங்கள் தன்னிச்சையான எழுந்த மானதாக ஒரு ஒழுங்கு முறை யற்றதாக காணப்பட்டது.

1921 ம் ஆண்டளவில் அதிகளவு பெண்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன், மீலியா சாகாகினி (Melia Sakakini), சுலேகாசிகாபி (Suleika Shihabi) ஆகிய இரு முன்னோடி பெண் போராளிகளினால் பாலஸ்தீன பெண்கள் சங்கம், (Palestinian Womens Union) என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. விவசாய பெண்களை இவர்கள் கவரமுடியாத தன்மையினால் ஆரம்பத்தில் இவர்களது முயற்சி தோல்வியடைந்தது.

1929ம் ஆண்டு ஜெருசலம் நகரில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் 300 பெண்களுக்கு மேல் சமூகமளித்து வால்போர் (Balfour) பிரகடனத்தை ரத்துச் செய்யக் கோரியும், யூதக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தவும் கோரி பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதே ஆண்டு ஜெருசலம் நகரில் நிமாற் - அல் அலாமி Nimat - al - Alami) என்ற பெண் போராளி தலைமையில் பாலஸ்தீன அரபு பெண்கள் கழகம் உருவாக்கப்பட்டது.

தொடர்ந்த வருடங்களில் இப் பெண்கள் கழகத்தின் கிளைகள் பாலஸ்தீனம் முழுவதும் நகரங்கள், கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்டது. விடுதலைப் போராளிகளின் குடும்பங்களுக்கும் அனாதைகளுக்கும் சமூக சேவைகள் செய்து அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதையே இக்கழகம் முக்கிய நோக்கமாக கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அரசியல் வேலைகளையும்செய்து வந்தது. இக்கழகத்தைச் சேர்ந்த பெண்கள் மக்கள் மத்தியில அரசியல்வகுப்புகளையும், போராட்டம பற்றிய பிரச்சார விளக்கங்களையும் செய்து வந்தார்கள். பாலஸ்தீன பெண்கள் கழக தலைமைச் செயலகமான Jaffo இல தைரியமும், புதிய முயற்சிகளில் ஈடுபட ஆர்வமுள்ள நதீரா கடாட் (Nathira Haddad) என்ற பெண் இருந்தார். இவர் பெய்சால் (Feisal) என்னும் அரசனிடம் சென்று பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தேடினார்.

ஆரம்பத்தில் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த பெண்களே கூடுதலாக இக்கழகத்தில் அங்கம் வகித்தனர். 1936 ம் ஆண்டு பாலஸ்தீனத்தில் நடந்த பொது வேலை நிறுத்தம் வரை கீழ்மட்ட வகுப்பைச் சேர்ந் தகுறைந்த கல்வியுடைய எந்தவொரு பெண்ணும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றவில்லை வேலை நிறுத்தத்தின் 1 வது மாத முடிவில் ஜெருசலத்தில் நடந்த கூட்டத்தில் கிட்டத்தட்ட 600 பெண்கள் கலந்து கொண்டு பாலஸ்தீனியர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்வரை வேலைநிறுத்தப்போராட்டம், தொடருவதென்றும், யூதகுடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றினர்.

சண்டைக்காலங்களில் பெண்கள் ஒன்றிணைந்து எதிர் போராட்டங்கள் நடத்துவதிலும் பிரச்நாரங்கள் செய்வதிலும் ஈடுபட்டு வந்தனர். பாலஸ்தீன விடுதலைப் போராளிகளுக்கும் பிரித்தானிய - சியோனிசப்படை



www.tamilarangam.net



இடையே சண்டை நடைபெறும் காலகட்டங்களில் போராளிகளுக்கு உணவும் நீரும் அளித்து, ஆயுதங்கள் வாங்குவதற்கு பணம் சேகரித்தும் காயம்பட்டவர்களுக்கும் அனாதைகளுக்கும் புனர்வாழ்வளிப்பதிலும் இக்கழக உறுப்பினர்கள் ஈடுபட்டனர். சாதாரண விவசாய பெண்கள் எவ்வாறு தங்கள் காய்கறி கூடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு சென்று மலைகளிலுள்ள போராளிகளுக்கு அளித்தனர் என்பது பற்றியும், பாலஸ்தீனப் பெண்களின் தனிப்பட்ட வீர சாகசங்கள் பற்றியும் பல கதைகள் உண்டு.

1948- ஆம் ஆண்டளவில் பெண்கள் பெருமளவில் தமது தாய் நாட்டை காப்பதற்காக போராட்டத்தில் குதித்தனர். அத்தோடு 1947ம் ஆண்டு பெண்களுக்கான ஓர் அமைப்பு சக்ராற்-அல்-உக்குவான் (Zahrat-al Uqhuwan) ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பானது 1948ல் நடைபெற்ற அரபு இஸ்ரேல் சண்டையின்போது மக்களுக்கு, உணவு, மருத்துவ, ஆயுத உதவிகள் அளிப்பதிலும், அகழிகள் வெட்டுவதிலும், தடை அரண்களை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கேற்று வந்துள்ளது.

பாலஸ்தீன நகரங்களில் வேறு சில அமைப்புகள் Nablues நப்லஸீ போன்ற அமைப்புகள் பெண்களை இராணுவ உடையில் ஆயுதப் போராட்டத்தில் சிரிய இராணுவத்துடன் சேர்ந்து, இஸ்ரேலியர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தின. 1948இல் நடந்த அழிவின்போது பல தனிப்பட்ட பெண்கள் நடத்திய வீரசாகசநிகழ்ச்சிகளும் உண்டு. தனது கணவனும் மகனும் சியோனிசவாதிகளால் கண் முன்னால் கொலை செய்யப்பட்டதைக் கண்ட Huauo Zaydon என்ற குடியானவ பெண் ஒருத்தி ஆத்திரமடைந்து ஒரு றைபிளை (Riffle) பறித்து திருப்பி சுட்டாள் Jenin என்ற இடத்திற்கு அருகிலிருந்த கிராமமொன்றில் குடியானவபெண் ஒருத்தி வேறு ஆயுதங்கள் கிடைக்காததால் கோடாரி யொன்றினால் சியோனிச சிப்பாயொருவனை கொன்றொழித்தாள்.

பாலஸ்தீனியர்களுக்கு எதிராககொண்டு வரப்பட்ட சுகாதார, கல்வி, வீட்டு வசதி போன்றவற்றில் காட்டப்பட்ட பாகுபாடுகள் பாலஸ்தீன பெண்களை பெருமளவில் பாதித்தது. கடுமையான பொருளாதார சூழ்நிலைகள், அதிகரிக்கும் விலை மாற்றங்களுக்கு சிறிதளவே அதிகரித்த கூலி மாற்றம், பாலஸ்தீன பெண்களை தொழிற்சாலைகளிலும் பண்ணைகளிலும் கூலி வேலை செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. கூலி வேலை செய்யும் இடங்களில் பாலஸ்தீன பெண்கள் அரபுக்கள் என்ற ரீதியிலும், பெண்கள் என்ற ரீதியிலும் ஒடுக்கப்பட்டு வந்தனர். ஆகவே இஸ்ரேலிய பொருளாதாரம் பெருமளவு பாலஸ்தீன தொழிலாளர்களின் கூலியில் சுரண்டலை ஏற்படுத்துவதன் மூலமே தங்கியிருந்தது.

1950-60 ம் ஆண்டு காலப் பகுதிகளில் நாடுகடத்தப்பட்ட பாலஸ்தீனியர்களினதும், அகதிகள் முகாமில் இருந்தவர்களினதும் பிரச்சனை பெரிய பிரச்சனையாக இருந்து வந்தது பாலஸ்தீனத்துக்கு வெளியே பல பெண்கள் அமைப்புகள் இப்பிரச்சனைகளை சமாளிப்பதற்காக உருவாக்கப்பட்டன. இவ்வமைப்புகள் முக்கியமாக கிழக்கு ஜெருசலேம், ஜோர்டான் லெபனான், சிரியா, போன்ற இடங்களில் அமைக்கப்பட்டன. அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏற்கனவே இயங்கி வந்த பாத்கட்சி Baath Party அரபு தேசிய இயக்கம் (Arab Nationalist Movement) போன்றவற்றில் பல பெண்கள் இணைந்து செயல்படத் தொடங்கினர். மேலும் "லைலா காலிட்" என்ற அமைப்பொன்றில் சேர்ந்து தொடர்ச்சியான விமான கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

1948ம் ஆண்டு நடைபெற்ற சண்டையைத் தொடர்ந்து பாலஸ்தீன மக்கள் அரபு நாடுகள் தமக்கு உதவியளிக்கும் என்ற மாயையிலிருந்து விடுபட்டனர். அரபு நாடுகள் செய்வது குறைவாகவும் பெரிதளவில் சொல்வதாகவும் உள்ள நிலையை உணர்ந்தனர். அரபு நாடுகளுடன் சேர்ந்து நடத்திய நீண்டகால போராட்டத்தை தொடர்ந்து 1964ல் பாலஸ்தீனியர்கள் தங்களுக்கு தனியான அமைப்பு, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தனர். முதலாவது பாலஸ்தீன தேசிய சபைக்கான முன்னேற்பாட்டு குழுவில் அங்கம் வகித்த 400 பிரதிநிதிகளில் 21 பெண் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

சமூக விடுதலையையும், தேசிய விடுதலையையும் ஏற்படுத்துவதற்கு ஒரு பெண்கள அமைப்பை உருவாக்கும் நோக்குடன் பெண்கள் மாநாடு ஒன்று 1945ம் ஆண்டு ஜெருசலம் நகரில் நடைபெற்றது 169 பெண்கள் பங்கு பற்றிய இம்மாநாட்டில் பாலஸ்தீனிய பெண்கள் பொதுமன்றம் என்னும் அமைப்பு (GUPW) உருவாக்கப்பட்டு பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் சேர்ந்து செயல்படுவதாக தீர்மானிக்கப்பட்டது, 1966ம் ஆண்டு ஜோர்டான் அரசானது இச்சங்கத்தை மற்றைய பாலஸ்தீனிய

www.tamilarangam.net



# பாலஸ்தீன பெண் போராளி



விடுதலை அமைப்புகளுடன் சேர்த்து தடை செய்தது: ஆனால் மற்றைய பகுதிகளிலிருந்த இதன் கிளைகள் தொடர்ந்தும் இயங்கி வந்தன.

ஜெருசலத்தில் முக்கியமாக அமைக்கப்பட்டிருந்த இச்சங்கம் 1970ல் பெய்ரூட்டுக்கு மாற்றப்பட்டது. டுபாய் (Dubai) இலிருந்து மொரோக்கோவரை கிளைகளை கொண்டுள்ள இச்சங்கம் திறமையும் துணிவுமுள்ள இஸாம்பட்-கல்-காடி (Isambad-ol-Hadi) அவர்களை தலைவராக கொண்டு இயங்கி வருகிறது. இவர் 1968இல் இஸ்ரேலியர்களினால் சிறை வைக்கப்பட்டு பின் நிரந்தரமாக நாடுகடத்தப்பட்ட வராவார். பாலஸ்தீனிய மக்களின் வாழ்க்கையில் அரசியலிருந்து பண்பாடுவரை சகல அம்சங்களிலும், கூடுதலாக அகதிகள் முகாம்களிலுள்ள மக்களுக்கு சேவை செய்வதிலும், போராட்டத்திற்கு வேண்டிய மூலப் பொருட்கள் வழங்குவதிலும் இவ்வமைப்பு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. 1968இல் தான் முதன் முதலில் பெண்களுக்கான இராணுவப் பயிற்சியை விரிவாக்கி இப்பொழுது உலகத்திலேயே முதல் தரமான பெண் இராணுவத்தினரை உருவாக்கியுள்ளார்கள் அல்பட்டா Al-Fateh( இயக்கத்தைச் சேர்ந்த 21 வயது "சாடியா அபுகசலே" Shadiaabu Gohazoleh என்ற பெண் கொரில்லா போராட்டத்தில் இறந்த முதல் பெண் போராளியாக விளங்குகிறார்.

பாலஸ்தீனிய சமூகத்தில் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினதும் மற்றைய ஆயுத போராட்ட இயக்கங்களினதும் எழுச்சி பாலஸ்தீனிய பெண்களின் மத்தியில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உதாரணமாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பெரிய இயக்கமான Al Fateh இன் பெண்கள் பகுதியில் 1969 ஆம் ஆண்டு 'சமீட்' வேலைத்தளங்களில் 67./ பெண்கள் வேலையாட்களாகவும் 27./ நிர்வாகத்திலும் இருந்தனர். பாலஸ்தீனிய செம்பிறைச் சங்கத்தில் (Palestine Red Cresecnt Society) 85./ வீதமானோர் பெண்களாகக் காணப்படுகின்றனர். மேலும் பாலஸ்தீனிய ஒன்றுபட்ட அலுவலகத்தில் 24./· வீதமும் பாலஸ்தீனிய திட்டமிடல் நிறுவனத்தில் 36 வீத

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாணோரும் பாலஸ்தீனிய ஆராய்ச்சி நிறுவனத்தில் 46. 5 / வீதமானோரும் பெண்களாகக் காணப்படுகின்றனர்.

இந்த கால கட்டத்தில் (GUPW) பாலஸ்தீனிய பெண்கள் பொதுமன்றம் துரிதமாக இயங்கும் தாபனமாக செயல்பட்டது. இந்த பெண்கள் இயக்கம் பெண் விடுதலைக்கான முயற்சிகளில் மட்டும் ஈடுபடாது சிறு பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையங்களையும் சிறுவர்களுக்கான பாடசாலைகளையும், தொழிற் கல்வி நிலையங்களையும், வேலைத் தளங்களையும் நடத்தி வந்தனர். பாலஸ்தீனிய பெண்கள் பொதுமன்ற அமைப்பின் மருத்துவ உபயோகம் தாதிகள் பயிற்றுவித்தல் கல்வி, பொது வேலை, பொது மக்கள் பாதுகாப்பு இராணுவ பயிற்சி போன்ற துறைகளில் போராளிகளுக்கு பயிற்சியளித்தும் வந்தனர்.

பாலஸ்தீனிய பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்வதன் மூலம் மற்றைய அரபு அல்லது உலக நாடுகளைப் போலல்லாது சமூக, பொருளாதார அரசியல் ரீதியாக அதிகளவு சுதந்திரம் அடைந்து வருகிறுர்கள். இனவாதிகளையும். பால்ரீதியாக பேதப்படுத்துபவர்களையும் மத்திய கிழக்கிலுள்ள ஏகாதிபத்திய தரகு முதலாளிகளையும், சியோனிசவாதிகளையும் அடித்து விரட்டி தமது சொந்த பூமியான பாலஸ்தீனத்தை மீட்பதன் மூலமே,பூரணவிடுதலை அடையலாம் என்பதில் பாலஸ்தீனிய பெண்கள் பூரண உறுதியுடையவர்களாக இருக்கிறார்கள்.

வெவ்வேறு அரபு நாடுகளில் காணப்படும் பெண்களுக்கு எதிரான அடக்கு முறைச் சட்டங்களைப் பற்றியும் கொடுமைகளைப் பற்றியும், அங்கேயுள்ள பெண்களின் நிலை பற்றியும் இஸ்ரேலிய தொழிலாளர் வர்க்கமும் இஸ்ரேலிய-பிரித்தானிய-பொதுமக்கள் நல்லுறவு அமைச்சும் அண்மையில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தனர், இதில் பாலஸ்தீனப் பெண்களைப் பற்றி இதில் எதுவும் குறிப்பிடவில்லை மாறாக அரபு நாடடுப் பெண்களின் விடுதலைக்கு மட்டுமல்லாது உலக நாடுகளிலுள்ள பெண்களின் விடுதலைக்கே பாலஸ்தீனிய பெண்கள் ஒளியேற்றுவார்கள், என இதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாலஸ்தீனிய பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய சக்திமிக்க பங்களிப்பை வழங்கி வருகிறுர்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை வரலாறு அவர்கள் அடையப்போகின்ற அவர்களுடைய சாதனைகளையும் நிச்சயமாக எமக்கு காட்டும். ஆனால் இங்கு குறிப்பிட்டதை விட அவர்களுடைய உண்மையான சாதனைகள் அதிகம் என்பதை நாம் உணர வேண்டும். 1948ம் ஆண்டுக்கு முன்பு அராபிய சமூகமானது பழமை வாதத்திலும், குல வழக்கங்களிலும் ஊறிச் கிடந்தது. பாலஸ்தீனிய சமூகத்தில் ஒரு பகுதியினராகிய பெண்கள் புரட்சியில் பங்குபற்றியதன்மூலம் பழமைவாத வழக்கங்களை மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளார்கள். வரலாற்றில் ஏற்பட்ட சம்பவங்கள் எந்தவித ஆயத்தமோ, நேரமோ இல்லாமல் போராட்டங்களில் பாலஸ்தீனிய பெண்களை பங்கு பற்ற வைக்கிறது. தனது நாட்டு நலனுக்கான போராட்டத்தில் தனது குடும்பத்தினதும், ஆண்வர்க்கத்தினதும் அடிமை விலங்கை உடைத்துக் கொண்டு துணிவுடன் போராட்டத்தில் பங்கு பற்றி வருகிறார்கள்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம் 1947-67 வரை காலப் பகுதியில் தனது சக்தியை வெளிக்காட்டாமல் பல போராளிகளை உருவாக்குவதில் ஈடுபட்டது. இந்த கால கட்டத்தில் உருவாகிய ஒவ்வொரு போராளியும் 1948ம் ஆண்டுக்கு பிறகே பிறந்தவர்களாகும். இவர்கள் எவரும் பாலஸ்தீனத்தை கண்ணால் பார்த்தவர்களாக இல்லை. ஆனால் மீட்பதற்காக உயிரைக் கூட கொடுக்க தயாராயிருக்கிறார்கள், அகதிகள் முகாம்களிலேயே இப்பாலஸ்தீனிய போராளிகள் உருவாகுகிறார்கள். இந்த அகதிகள் முகாம்களில இருக்கின்ற பெண்கள் தங்களது கணவர்கள் போராட்டங்களில் ஈடுபடும் அதே நேரம் தங்கள் பிள்ளைகளை பேணுவதிலும் குடும்பத்தை கட்டி வளர்ப்பதிலும் தனித்து ஈடுபடுகிறுர்கள், இப்பரிதாபகரமான சூழ்நிலைகளிலும் பாலஸ்தீனிய பெண்கள் உறுதியுடனும் நிதானத்துடனும் புதிய சமுதாய மொன்றை தங்களது தாய் நாட்டை மீட்கும் புனிதப் போராட்டத்திற்கு தயாராகி வருகின்றுர்கள். இப்படியான சூழ்நிலைகள் பாலஸ்தீனிய பெண்களை அதிகளவு வேகத்துடனும் பெண் விடுதலையில் மற்றைய அரபு நாடுகளைவிட முன்னேறுவதற்கு வழி வகுக்கின்றன. இப்படியான பாலஸ்தீன பெண்களினது போராட்ட வழிமுறைகள் சியோனிசவாதிகளை முறியடிப்பது மட்டுமல்லாது முழு அரபு நாடுகளிலுமுள்ள பெண் அடிமை முறைக்கே முற்றுப்புள்ளி வைக்கும் என முழுதாக நம்பலாம்.

✶✶✶

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தோழர் லெனினின் அழியாப் புகழ் உடலுக்கு:
மக்கள் அஞ்சலி செலுத்தும் காட்சி.

# அக்டோபர் புரட்சியும் ஓர் அறைகூவலும்

**—தோழர் மதுக்கூர் கண்ணன்**

உலகமயானத்தில்—
செத்துக்கிடந்த வருஷங்கள்
சிதையில் இருக்கையில்....
அந்தப்
பசுமையான
பத்து நாட்களின்
மொத்தப் பிரசவமும் நடந்தது

வரலாற்றின் ஏடுகளில்
நிகழ்ச்சிகள்—
மென்மையாக, வர்ணம்
தீட்டிக்கொண்டிருந்தபோது....
ரத்தத்தை எடுத்துப்பூசிய
ராட்சஷத் தூரிகையோடு
'போல்சுவிக்' கட்சியின்
புறப்பாடு நிகழ்ந்தது....

நிலக்கரிச் சுரங்கங்கள்
நெட்டுயிர்த்தன...
கோதுமைவயல்கள்
கொந்தளித்தன...
நெசவுத்தறிகள்
நிமிர்ந்துபார்த்தன....
ஆலைச்சங்குகளின்
அகன்ற வாய்கள்
'அபாயம்' என்ற சொல்லுக்கு
அடைக்கலம் கொடுத்தன..

குளிர்கால அரண்மனையைக்
குறிவைத்த
கப்பல் 'அரோரா'வின்
கனத்த குண்டுகள்
அங்கிருந்த
சிற்ப வேலைப்பாடுகளைச்
சிதைத்தபோது—
"கொடுங்கோலன்
ஜார் மட்டுமல்ல
முதலாளித்துவம்
அவனை விட
மோசமானது"—என்கிற
சிந்தனையையும்
சேர்த்துவிதைத்ததாமே!

www.tamilarangam.net



வயிற்றை-பூமிக்கு
வாசிக்கக் காட்டியபடியே
சூரியனின்
முதுகுமெசா றிதலில்
சுகப்பட்டுக்கொண்டிருந்த
தோட்டத் தொழிலாளர்கள்
"அம்மைத்தழும்புகளைக்கூட
எங்கள்மேனியில்
அனுமதிக்க மாட்டோம்''—
என்று ஆர்ப்பரித்தது....ஓர்
அக்டோபருக்குப் பின்னரே
அல்லவா?

ஏகாதிபத்தியம்
எதிர்ப்பைக் காட்டினல்—
கோப்பையை நிரம்பி
வழியச் செய்திடும்
கடைசித்துளியாய்
பாட்டாளிவர்க்கம்
படை நடத்தும் என்று—
புரட்சி ராணுவக் கமிட்டியில்
லெனின் என்கிற
அறிவுப்புயல் அறிவித்ததே!

பள்ளம்பூத்துக்கிடந்த
பாதைகளில்—
நிரந்தர நிரவலுக்காக
தங்களையே, அதில்
அள்ளிப்போட்டு
அடைத்தவர்களின்
இறப்பில்கூட....
சாம்பல்மேடுகளும்
சவக்குழிகளும்
ஏற்ற இறக்கத்தை
ஏற்படுத்திவிட்டன
அந்த
முகந்தெரியாத வீரர்களுக்கு
முகவரி—
வாழ்க்கையில்
வழங்கப்படவில்லையெனினும்
வரலாற்றில்
எழுதப்பட்டு விட்டது

புறப்படு
இதுதவிர இன்னும்
எத்தனையோ மாதங்கள்
இருக்கின்றன...
எனக்கும் உனக்குமாய். ★

## கண்ணீர் அஞ்சலி...

மூலதனத்தை கட்டிக் காப்பதற்கு பல ஈனத்தனமான செய்கைகளை செய்துகொண்டிருக்கும் ஏகாதி பத்திய அமெரிக்காவின் கைக் கூலிகளினால், படுகொலை செய்யப்பட்ட இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு நாம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

திருமதி இந்திரா காந்தியின் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் நிலைப்பாடுகள் மிகவும் உறுதி வாய்ந்து.

அணி சேரா நாடுகளின் தலைவியாக இருந்து மூன்றாம் மண்டல நாடுகளை ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கவிடாமல் தடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டவர்.

இன்று தமிழீழத்தில் இனவெறியின் கொடுமைக்குள் சிக்குண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு, அறிவார்ந்த, தெளிவான அரசியல் நோக்குடன் செயல்பட்டுக் கொண்டு, நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்துகொண்டிருந்தவர் இன்று நம்முன் இல்லை எனும்போது.......

ஈடுசெய்ய முடியாத இவரின் இழப்பு, இந்திய மக்களை மட்டும் துயரத்தில் ஆழ்த்திச் செல்லவில்லை. உலக சமாதானத்தை விரும்பும் மக்களையும் ஆறா துயரத்தில் ஆழ்த்திச் சென்று விட்டது. ★



www.tamilarangam.net



# பெண்ணினம் எவ்வாறு அடிமை நிலையில்?

சர்வதேச ரீதியாக இன்று ஏகாதிபத்திய அரசுகளையும் அதன் சார்பு நாடுகளையும் எதிர்த்து மக்கள் போராட்டங்கள் வெடித்த வண்ணமே இருக்கின்றன. இதன் விளைவாக ஆட்டம் காணும் இவ் அரசுகள் தங்களின் சுரண்டலை நீடிப்பதற்காக தொழிலாளர் வர்க்கத்தினை பிளவு படுத்தும் முகமாக தேசிய இனங்களுக்கிடையே இனப் பூசல்களையும், மதரீதியிலான பிரச்சனைகளையும், பிற அடிப்படையிலான பிரச்சனைகளையும் தூண்டி விடுவஃதும் அவற்றினை எதிர்த்து போராடும் மக்கள் மீது இராணுவ வன்முறையைக் கட்டவிழ்த்துவிடுவதும் இன்றைய கால கட்டத்தில் சர்வ சாதாரண நிகழ்ச்சியாகி விட்டன.

## சுதந்திரம் எனும் மாயை!

உலக நாடுகளில் நடக்கும் இவ் அனைத்துப் போராட்டங்களையும் வர்க்க ரீதியிலான சிந்தனையில் அணுகி தீர்க்க முற்பட்டால் தான் அதாவது தனியார் சொத்துரிமை ஒழிக்கப்பட்டு சமுதாய சொத்துரிமை உருவாக்கப்படும்போது தான் இப்போராட்டங்கள் யாவிற்கும் பூரணமான தீர்வு கிடைக்கும். அன்று தான் மனித இனத்திற்கே விடிவு கிடைக்கும். இச்சமுதாயத்தில் தான் பெண்ணினத்திற்கும் பூரணமான உண்மையான சுதந்திரம் நிதர்சனமாகிறது. ஏனெனில் பெண்களின் சமத்துவம் இச் சமுதாயத்தில் தான் பூரணமாக பேணப்படுகின்றது. மாறாக மூலதனத்தின் ஆதிக்கம் பாதுகாக்கப்படுகின்ற நாடுகளில் பெண்களுக்கு சுதந்திரம் வழங்கப்படுகிறதென பெரிதாக தம்பட்டம் அடித்துக் கொள்கின்றனரே ஒழிய அங்கு சுதந்திரம் என்பது ஒருமாயையாகவே தோற்றமளிக்கிறது.

இந்நிலைப்பாட்டையே தோழர் லெனின் "ஆண்களுக்கு தரப்பட்டிருக்கும் தனி உரிமைகளால் பெண்குலம் பாதிக்கப்படும் வரை மூலதனத்தின் நுகத்தடியிலிருந்து தொழிலாளிக்கு விடுதலை கிடைக்காதவரை முதலாளி நிலவுடமையாளர் வணிகர் ஆகியோருடைய நுகத்தடியிலிருந்து உழைக்கும் விவசாயிக்கு விடுதலை கிடைக்காதவரை உண்மையான சுதந்திரம் என்பது கிடையாது. அது ஏற்படவும் முடியாது!' என்று வர்ணித்திருக்கிறார்.

## பெண்களின் அந்தஸ்து

கடந்து வந்த மனித இன வரலாற்றுப் பாதையை நாம் நோக்கும்போது தற்போது தானா பெண்ணினம் அடிமைப்பட்டிருக்கும் நிலை ஏற்பட்டது? அல்லது மனித இனத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே பெண்ணினம அடிமைப்பட்டிருக்கிறதா? என்ற கேள்வி எம்முன்னே எழுந்து நிற்கின்றது,

இயங்கியல் ரீதியாக மனித வரலாற்றுப் பாதையில் நாம் பின்நோக்கிச் சென்று ஆராயும்போது சிறு சிறு கூட்டங்களாக மனித இனமானது குகைகளில், இயற்கையின் சீற்றங்களுக்கும். விலங்கினங்களிற்கும் பயந்து வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அதாவது காட்டுமிராண்டியாக நாகரீகமற்றிருந்த காலத்தில் உணவு தேடி வேட்டைக்குச் செல்லும்போதும் பெண்ணே வழி நடாத்தியதுடன் அக்குழுவிற்கு பொறுப்பாகவும் தலைவியாகவும் பெண்ணே முதன்மைத்துவம் வகித்துக் கொண்டிருந்தாள், குறிப்பிட்ட காட்டுமிராண்டி சமுதாயத்தில் தலைமை வகிக்கும் பெண்ணின் பின் அவளது மூத்த மகளே தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். மேலும் பிள்ளைகள் தாயை மையமாக வைத்தே இனம் காணப்பட வேண்டிய நிலையில் இருந்ததாலும் பெண்ணே சமுதாயத்தில் முக்கிய அந்தஸ்து வகுத்தாள். இது மனித இனத்தின் ஆரம்ப கட்டத்தில் காணக் கூடியதாக இருந்தது.

## கைமாறிய தலைமை

மனித இனம் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவின் காரணமாக மனிதன் படிப்படியாக காட்டுமிராண்டி நிலையில் இருந்து விடுபட்டு நாகரீக நிலைக்கு மாறினான். இக்கால கட்டத்தில் அவன் கால் நடை வளர்க்கவும் பயிர் சாகுபடி செய்யவும் தெரிந்து கொண்டான். இந்நிலையில் ஆண்களிடம் தலைமைத்துவம் படிப்படியாக கால ஓட்டத்தில் கைமாறியது. மேலும் சனத்தொகை பெருக்கத்தின் காரணமாக ஒரே கூட்டமாக வாழ்ந்த மனிதர்கள் தனித்தனி குடும்பங்களாக பிரிந்து வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் பொதுச் சொத்து என்ற அமைப்பு மறைந்து ஒவ்வொரு குடும்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்திற்கும் சொந்தமான தனிச் சொத்துடமை மலர்ந்தது. தனிச் சொத்தமைப்பின் வளர்ச்சி வேகமாக முன்னேறிச் செல்லும் காலம் சமூகத்தில் அறிவு வளர்ச்சி காரணமாகவும் சீர்திருத்த கருத்துக்கள் காரணமாகவும் அன்று மக்களிடையே முழு நம்பிக்கை பெற்றிருந்த சமூகத் தலைவர்களினாலும் மதவாதிகளினாலும் சுயநலம் கருதி ஏற்படுத்தப்பட்ட சமுதாய கட்டுமானத்திற்குள் பெண்ணினம் சிக்குண்டாள். இச்சமுதாய கட்டுமானத்தின் வளர்ச்சிகாரணமாக ஏற்பட்டதே ஒரு பெண்ணிற்கு ஒரு கணவன் என்ற நிலையாகும். அதாவது ஒவ்வொரு குடும்பத் தலைவனும் தனது குடும்பத்தின் சொத்துக்கள் தனக்குப் பின் தன் குழந்தைகளுக்கே சேரவேண்டும். என்ற நிலையில் தனது குழந்தைகள் எல்லாம் தன்னுடையதாகவே இருக்க வேண்டும். என்ற முடிவுக்கு தள்ளப்பட்டான். இதனால் உருவான பல சமூக கட்டுப்பாடுகளால் பெண்ணை நான்கு சுவர்களுக்குள் அடைத்து வைக்கும் நிலை ஏற்பட்டது.

இவ்வாறு உருவான பெண் இன ஒடுக்கு முறை மேலும் பல வழிகள் மூலம் விரிவு படுத்தப்பட்டது. பெண்கள் ஆணுக்கு அடங்கியவளாக நடப்பதற்குரிய அனைத்து வேலைகளையும் கால ஓட்டத்தில் ஆண் இனம் கச்சிதமாகச் செய்து வந்துள்ளது.

ஆரம்ப நிலையில் புராதன பொதுவுடைமைச் சமுதாயத்தை தொடர்ந்து வந்த ஆண்டான் அடிமை சமுதாயத்திலும் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் பெண் ஒரு போகப் பொருளாக பிள்ளை பெறும் இயந்திரமாக ஆண் இனத்தினால் பயன்படுத்தப் பட்டாள். பண்பாடு சடங்கு சம்பிரதாயம் என்ற கட்டுக்கோப்புகளால் ஒடுக்கப்பட்டு அவள் வெளி உலக அறிவு பெறுவது முற்றாக குறைக்கப்பட்டது. இதை ஆண் இனம் வரலாற்றில் வெற்றிகரமாக செய்து முடித்த சதி என்றே சொல்லலாம்.

## முதலாளித்துவ சமூகத்தில் பெண்கள்

மனித வரலாற்றில் முதலாளித்துவ சமுதாயத்தின் தோற்றமானது பெண்களை ஓரளவு வெளியுலகிற்கு கொண்டு வந்தது எனலாம். ஆனால் இம் முதலாளித்துவ அமைப்பு மனிதர்களுக்கு இடையிலுள்ள உறவுகளுக்கு முக்கியத்துவம் இல்லாமல் செய்து பணத்தை மையமாக வைத்து உறவுகளை ஏற்படுத்தி பணத்திற்காக எதையும் செய்யக் கூடிய நிலையிலுள்ள சமுதாயத்தை உருவாக்கியுள்ளது.

முதலாளித்துவம் அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட ஆண்கள் தேர்ச்சி பெறும் விடயங்களில் பெண்கள் தேர்ச்சி பெறக் கூடிய நிலை இருந்தாலும் ஆண்களுக்கு இருக்கும் உரிமை பெண்களுக்கு வழங்கப்படவில்லை- ஏனெனில் "முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் பற்றி அலங்காரமான சொற்றொடர்களும், கம்பீரமான வார்த்தைகளும், மிதமிஞ்சிய வாக்குறுதிகளும், ஆர்ப்பாட்டமாக ஒலிக்கும் கோஷங்களும், அடங்கிய ஜனநாயகமாகும். ஆனால் உண்மையில் இம்முதலாளிதத்துவ வாதிகள் பெண்களுக்கு சுதந்திரமும் சமத்துவமும் இல்லாதிருப்பதை உழைக்கும் மக்களுக்கும் சுரண்டப்படும் மக்களுக்கும் சுதந்திரமும், சமத்துவமும இல்லாதிருப்பதை மூடிமறைக்கப் பார்க்கின்றனர்" (லெனின்)

எனவே. இச்சமுதாய அமைப்பிலும் பெண்ணினத்திற்கு முற்றாக விடிவு கிடைக்கவில்லை மனித இனத்திற்கே விடிவு காண வேண்டுமெனில இச்சமுதாய அமைப்பினை மாற்ற வேண்டியது வரலாற்றில் தவிர்க்க முடியாதது ஆகின்றது. அதாவது ஒரு சோஷலிசப் புரட்சி அவசியமாகின்றது. ஆதலால் தனிச் சொத்துடைமை முறையை ஒழித்து பொதுச் சொத்துரிமை மலரும் நன் நாளுக்கான தயாரிப்புகளில் ஈடுபடுவது மக்களின் கடமையாகும். ★

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழர் பவான்

# வீரமறவர்களுக்கு எமது அர்ப்பணம்

ஸ்ரீலங்கா அரசின் இனவெறியை அடக்க
சீறி எழுந்த மறவர்களே
தமிழீழத்திற்காய் நீங்கள் செய்த தியாகம்
வரலாற்று ஏடுகளில் பொறிக்கப்பட்டு விட்டன
அதன் பக்கங்களை புரட்டுகின்றோம்.

வெலிக்கடை சிறை மதிலுள் வைத்து
வெறியர்களால் வதைபட்ட வீரமணிகளே,
தமிழீழத் தரணிக்காய் உயிர்நீத்த உத்தமர்களே,
தொடர்ந்தே வந்ததடா, எமை துயரம் கொண்டதடா

விடுதலைக்காய் கடலினிலே அலைதட்டி சென்ற
வெற்றி சுடராம் எம் அருமை பவானே,
உன் மரணம் கேட்டு துடியாய் துடித்தோம்
விடுதலைக்காய் நீயாற்றிய பணி தொடர்ந்தோம்

தோழர் தாஸ்

புரட்சிப் பாதையிலே வீரச் சாவுகள் தொடர்ந்ததடா
கரவைத் தியாகி தாஸின் மரணச்சேதி கேட்டு
நாம் கலக்கமுற்றோம், நின் பிரிவால்,
விடுதலைக்காய் நீயாற்றிய பணி தொடர்ந்தோம்

அடுத்து தமிழன்னை அரவணைத்த வீரன்
திருமலையின் திருவிளக்காம் தோழர் ராஜனே
உரிமை மீட்சிக்காய் உன் தொண்டுகள் ஏராளம்
விடுதலைக்காய் நீயாற்றிய பணி தொடர்ந்தோம்

தமிழீழத்திற்காக வீர மரணமுற்ற வீரர்களே
உங்கள் அளப்கரிய சேவை விடுதலைக்கே
அந்த பணி தளரா நிறைவேற்றி
நாளை வெற்றி மலர்களை உங்கள் பாதங்களில்
அர்ப்பணிப்போம்! அர்ப்பணிப்போம்! அர்ப்பணிப்போம்!



தோழர் ராஜன்
(செபமாலை யேசுதாஸ்)

www.tamilarangam.net



பிரிவினை கோருகின்றோம் நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றோம் எனச் சொல்கின்றீர்களே நாம் எப்போது உங்களுடன் சேர்ந்திருந்தோம்? ஐரோப்பியரால் கைப்பற்றப்பட்ட எமது பூமி எக்காலத்திலும் எம்மிடம் திருப்பி ஒப்படைக்கப் படவில்லை. அதனை நாம் இணைப்பு என்ற பெயரில் யாரிடமும் தாரைவார்க்கவும் இல்லை.

ஆக்கிரமிப்புக்கள் வேறுபட்ட அதிகார அமைப்புக்களினுல் கைமாறிப் பொறுப்பேற்கப்பட்டு வரும் நிலையே இன்னும் நீடிக்கின்றதே அன்றி எம்பூமியை நாம் நிர்வகிக்கும் நிலை எம்வசம் இன்னும் வரவில்லை.

இந்நிலையில் நாம் கோருவது விடுதலையே அன்றி துண்டாடல் அல்ல. இதனை நாம் கோருவது நிச்சயம் குறுகிய மனப்பான்மையான ஓர் செய்கையன்று. இதை நாம் பெறுவதன் மூலம் எமது இலட்சியம் மட்டுமல்ல நிறைவேறுவது - சிங்கள மக்களுக்கும் பெரும் நன்மையைச் செய்தவர்களாவோம்.

- தலைவர் தங்கத்துரை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழத்தில்...





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்